செய்தி வெளியீடு எண். 48/2016 நாள்: 15.09.2016

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் எடுக்கப்பட்டு வரும் தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் ஆய்வு.**

*******

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் எடுக்கப்பட்டு வரும் தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து இன்று (15.09.2016) சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய கூட்ட அரங்கத்தில் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாகம், பேரூராட்சிகள் துறை, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். மேலும், சென்னை பெருநகர மாநகராட்சி உள்ளிட்ட 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் சாலைப் பணிகள், பாதாள சாக்கடைத் திட்டங்கள், குடிநீர் வழங்கல் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், எல்இடி தெருவிளக்குகள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் விவரங்களையும் கேட்டறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நகர்ப்புர உள்ளாட்சியின் அனைத்து பகுதிகளுக்கும் தங்குதடையின்றி குடிநீர் வழங்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள

வேண்டும் எனவும், தேவை ஏற்படின் புதிய போர்வெல்கள் அமைத்து குடிநீர் வழங்க தக்க நடவடிக்கை எடுக்கவும் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

மேலும், நடைபெற்று வரும் குடிநீர்த் திட்டப் பணிகளை விரைவுபடுத்தி, உரிய காலத்திற்குள் பணிகளை முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி **110**–ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மேதகு அளுநரின் உரையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கை அறிவிப்புகள், மானியக் கோரிக்கை அறிவிப்புகள், மாவட்ட ஆட்சியர் கூட்ட அறிவிப்புகள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட சிறப்பு அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் தொற்று நோய்கள் ஏற்படாமல் தடுக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளை அனைத்து அலுவலர்களும் விழிப்புடன் மேற்கொள்ள பின்வரும் அறிவுரைகள் வழங்கினார்:-

- ❖ மழைநீர் வடிகால்களை தினமும் சுத்தப்படுத்தியும், கழிவுநீர் வடிகால்களில் கழிவு நீர் தேங்காமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். அவற்றில் கொசு ஒழிப்பு மருந்தை சரியான கால இடைவெளியில் தெளிக்க வேண்டும்.
- ❖ தொற்று நோய்களைப் பரப்பும் ஏ.டி.எஸ். கொசுக்களை முழுமையாக ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதிகளிலும், குடியிருப்புப் பகுதிகளில் உள்ள வீடுகளின் உள்ளேயும், வெளியேயும் புகை

அடித்தல் மற்றும் மருந்து தெளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

- ❖ மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் காலை **6** மணிக்கு அலுவலர்கள் நேரில் சென்று துப்புரவுப் பணிகளையும் குடிநீர் வழங்கல் பணிகளையும் ஆய்வு செய்ய வேண்டும். கொசு உற்பத்தியாகும் ஆதாரங்களை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும்.
- ❖ தற்பொழுதுள்ள குடிநீர் ஆதாரம் பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பின் மாற்று ஏற்படாக தூய்மையான இடத்தில் இருந்து தண்ணீர் எடுத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் நிலை சீராகும் வரை, தினமும் லாரி மூலம் குடிநீர் வழங்கப்பட வேண்டும்.
- ❖ கொசுமுட்டை மற்றும் புழுக்களை ஒழித்திட தேவையான அளவு மருந்தினை இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்
- ❖ புகை அடிக்கும் இயந்திரங்கள் போதுமான அளவில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும். தேவைப்படின் உடனடியாக புதிய இயந்திரங்களை கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ❖ பொது மக்களுக்கு நிலவேம்புக் குடிநீரை இலவசமாக தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ❖ தொற்று நோய் பாதிப்புகள் அறியப்பட்டுள்ள இடங்களில் மேற்படி நடவடிக்கைகள் தடையின்றி தொடர்ந்து போர்க்கால அடிப்படையில் தீவிரமாக நடைபெற ஏதுவாக சிறப்பு குழுக்களை அமைத்து சுகாதார துறை அலுவலர்களுடன் இணைந்து ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும்

இவ்வாய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி இஆப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய முதன்மை செயலர்/ மேலாண்மை இயக்குநர்(பொ) திரு.விக்ரம் கபூர், இஆப., பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் டாக்டர் டி.கார்த்திகேயன்,இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.தீரஜ்குமார், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.க.மகரபூஷணம் இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் திரு.விஜயகார்த்திகேயன் இஆப., மதுரை மாநகராட்சி ஆணையர் திரு.சந்தீப் நந்தூரி இஆப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை தலைமைப் பொறியாளர், மாநகராட்சி ஆணையாளர்கள், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள், மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள், நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர், சென்னை பெருநகர மாநகராட்சி துணை ஆணையர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை குடிநீர் வாரிய பொறியியல் இயக்குநர்கள், தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள், செயற் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்